**C.C. 347 of 2012 Previous Date :**

**அரசு சாட்சி 1 மீனாட்சி க/பெ முருகசாமி சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**03.10.2024**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கின் புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலிசார் எழுதிகொண்டார்கள். அதில் நான் கையொப்பம் போட்டேனா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் பழனி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை போலிசார் விசாரிக்கவில்லை. நான் சம்பவ காலத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லபடும் இடம் குமரவேல் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த நிலத்தை நான் குத்தகைக்கு பிடித்து விவசாயம் செய்து வந்தேன் என்றால் சரிதான். எங்களது பக்கத்து தோட்டமானது எதிரி தங்கபழத்தின் மாமனார் முத்துச்சாமிக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி முத்துசாமியின் பூமியை எதிரியும் முத்துச்சாமியும் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரிகளுடைய தோட்டத்தில் நாய் இருந்தது என்றும் அதை மருந்து வைத்து கொன்றது சம்பந்தமாக எங்களுக்கும் அவர்களுக்கும் பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. எனது மகன் மீது எதிரி நாயை உசுப்பிவிட்டார் அதனால் எனது மகன் நாயை கல்லை எடுத்து அடித்து விட்டார் . அது சம்பந்தமாக எனக்கும், எதிரிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரிதான். வழக்குச்சம்பவத்தின் போது எனது மகனுக்கு காயம் இல்லை என்றால் சரியல்ல. காலில் அடிபட்டது. அவர் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் அவரும் மருத்துவமனைக்கு வந்தார். வழக்குசம்பவத்தின் போது எனது மகன் ராஜேந்திரனுக்கு எவ்வளவு வயதிருக்கும் என்றால் 15–16 வயதிருக்கும். முத்துச்சாமிக்கு எவ்வளிவு வயதிருக்கும் என்றால் 60 வயதுக்கு மேலிருக்கும். வழக்கு சம்பவத்தின் போது எனது மகன் ராஜேந்திரன் முத்துசாமியை வாடா , போடா என்று மரியாதை இல்லாமல் பேசியுள்ளார் என்றால் சரியல்ல. அவர் அப்போது அங்கு வரவில்லை. ஆஜர் எதிரி

என்னை எந்த ஆயுதத்தில் அடித்தார் என்று எனக்கு தெரியாது. நானும் எதிரியும் வாய்த்தகராறு ஏற்பட்டது என்றும் அப்போது எனது மகன் கல்லை தூக்கி எதிரி மீது வீசினார் என்றும் அந்த கல் என்மீது பட்டு எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்த போது எதிரி எந்த ஆயுதத்தால் அடித்ததால் காயம் ஏற்பட்டது என்பது குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். சண்டை நடந்ததாக சொல்லபடும் நேரத்தில் எனது கணவரும் , எனது இரண்டு மகன்களும் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான்.

K R KALAIVANAN

Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.10.03 16:33:09 +0530

நீதித்துறை நடுவர்
பழனி

**C.C. 347 of 2012 Previous Date :**

**அரசு சாட்சி 2 ராஜேந்திரன் த/பெ முருகசாமி சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**03.10.2024**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 எனது அம்மா என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 5 எனது அப்பா என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் பழனி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் அதன் பிறகு வேறெங்கும் விசாரிக்கவில்லை. சண்டை நடந்ததாக சொல்லபடும் காலத்தில் எனக்கு வயது 19 இருக்கும். இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன் பகை இருந்ததா என்றால் அப்படி எதுவும் இல்லை. வழக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரியின் தோட்டத்தில் நாய் இருந்தது என்றும் அதற்கு நாங்கள் மருத்து வைத்ததாகவும் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. எதிரி தான் என்னை நாயை விட்டு கடிக்க விட்டார். வழக்கு சம்பவத்தின் போது எதிரியின் மாமனார் முத்து சாமிக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. வழக்கு சம்பவத்தின் போது எனக்கு காயம் ஏதுவுமில்லை என்றால் சரியல்ல. காலில் காயம் இருந்தது. எதிரியின் மாமனார் தடியை கொடுத்து எதிரியை என்னை அடிக்க சொன்னார். நான் மருத்துவமனை சென்று சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. முதலுதவி சிகிச்சை மட்டும் பெற்றுக்கொண்டேன். நாயை நாங்கள் மருத்து வைப்பது சம்பந்தமாக முத்து சாமி எங்களிடம் கேட்டதற்கு நான் தான் வயது வித்தியாசம் இல்லாமல் அவரை தகாத வார்த்தையால் பேசினேன் என்றால் சரியல்ல. அப்போது எனது அம்மாவிற்கும் எதிரிக்கும் வாய் தகராறு ஏற்பட்டது என்றும் நான் எதிரியை அடிப்பதற்காக கல்லை எடுத்து போடும் போது அந்த கல் எனது அம்மாவின் மீது பட்டு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது அம்மாவை எதிரி எந்த ஆயுதத்தால் தாக்கினார் என்றால் கட்டையை எடுத்து என்னை முதலில் அடித்தார் மறுபடியும் அந்த கட்டையால் என்னை அடிக்க வந்த போது எனது அம்மா குறுக்கே வந்து விட்டார் அது அவர் மீது பட்டுவிட்டது. போலிசார் அந்த கட்டையை

**கைப்பற்றினார்களா என்றால் போலிசார் சம்பவ இடம் வரவில்லை மருத்துவமனையில் வந்து தான் விசாரித்தார்கள். வழக்கு சம்பவத்தின் போது எனது அப்பா அங்கில்லை. போலிசார் என்னை விசாரித்த போது அவர்களிடம் எதிரி என்னை அடித்ததாகவும் அதற்காக நான் மருத்துவமனை சென்றது குறித்தும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.**

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2024.10.03 16:33:16 +0530

**நீதித்துறை நடுவர்**
**பழனி**

**C.C. 347 of 2012 Previous Date :**

**அரசு சாட்சி 3 முருகசாமி த/பெ குப்பணகவுண்டர் சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**03.10.2024**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லபடும் நேரத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கு முன்பு எங்களுக்கும் எதிரிக்கும் முன் விரோதம் இருந்ததா என்றால் வழக்கு சம்பவ காலத்தில் எதிரியின் தோட்டத்திற்கு இருபுறமும் நாங்கள் விவசாயம் செய்து வந்த தோட்டம் இருந்தது அதில் குறுக்காக போகும் போது அவ்வபோது எங்களிடம் எதிரி பிரச்சனை செய்வார். வழக்கு சம்பவத்தின் போது எதிரிகள் தோட்டத்தில் இருந்த நாயை நாங்கள் மருந்து வைத்து கொன்றுவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. அதனை கேட்ட போது எதிரிக்கும் எனது மனைவிக்கும் தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்தில் ராஜேந்திரனுக்கு வெளிப்புற காயம் இல்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தின் போது எதிரிக்கும் எனது மனைவிக்கும் வாய்தகராறு ஏற்பட்டது என்றும் அப்போது எனது மகன் எதிரியை அடிக்க கல்லை வீசிய போது அந்த கல் என் மகன் மீது பட்டு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல எதிரி தான் தடியை எடுத்து எனது மனைவியை அடித்துள்ளார். எனது மனைவிக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.**

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.10.03 16:33:22 +0530

**நீதித்துறை நடுவர்**

**பழனி**